

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தாலுகா கத்தப்பட்டில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின்சிலைக்கு பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பேரியகருப்பன் மலர்மாலை வைத்துமரியாதைசெ,லுத்தினார். உடன்மாவட்டஆட்சியர்திருமதிஆஷாஅஜித்,மாவட்டகாவல்கண்காணிப்பாளர்பிரவீன்உமேஷ்டோங்கரே, கதி.ராஜ். குமார்,, வழக்கறிஞர் கலைமணி ஆகியோர் உள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முகாம் அலுவலகத்தில் நேற்று (10.6.2024) கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்கள், ஏ.டி.சி. வரதராஜன் மற்றும் திருமதி பரமேஸ்வரி வரதராஜன் தம்பதியரின் மகன் வி. ஸ்ரீராம் (எ) கமல் – பி. ரம்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். உடன் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### மோடி பிரதமர் பொறுப்பேற்பு: மாநில உரிமைகளை மதித்து -

# ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறோம்!

## பிரதமர் நரேந்திர மோடியை வாழ்த்தி வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

**சென்னை, ஜீன் 11-**

**பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் நரேந்திர மோடி அவர்களை வாழ்த்தி வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மாநில உரிமைகளை மதித்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காததால் தெலுங்குதேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட 13 கட்சிகளின் ஆதரவுடன் பிரதமராக மோடி, மூன்றாவது முறையாக மீண்டும் பதவியேற்றார்.

புதுடெல்லியில் குடியரசுத்த தலைவர் மாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பதவியேற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு விழாவில், குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு, மோடிக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இதனையடுத்து, நாட்டின் பிரதமராக மூன்றாவது முறையாக மோடி பதவியேற்றுக் கொண்டார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையில் 29 பேர் ஒன்றிய அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

பிரதமராகத் தாங்கள், அரசியலமைப்பை உயர்த்திப் பிடிக்கும் வகையில் உண்மையாகப் பணியாற்றுவீர்கள் என்றும், நமது நாட்டின் மதச்சார்பற்ற தன்மையைத் தொடர்வீர்கள் என்றும், கூட்டுறவுக் கூட்டாட்சியியலை முன்னெடுப்பீர்கள் என்றும், மாநில உரிமைகளை மதித்து நடப்பீர்கள் என்றும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்றும் நம்புகிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தில் 1.50 லட்சம்

# மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா நோட்டு - பாடப் புத்தகங்கள்!

## திருப்பத்தூரில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

*சிவகங்கை, ஜுன் 11-*

ஆண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் நேற்று 10ம்தேதி திறக்கப்பட்டது. அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதல்வர் உத்தரவின் பேரில்1 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாட நோட்டு புத்தகங்கள் வழங்கப்படும் வழங்குமாறு உத்தரவிட்டார் அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் 1லட்சத்து 44 ஆயிரத்து 943பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா இலவச நோட்டு பாட புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித தலைமையில் திருப்பத்தூரில் நாகப்பா மருதப்பா பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலு முத்து வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 943 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதல்வரின் இலவச விலையில்லா பாட நோட்டு புத்தகங்களை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கிப் பேசியதாவது:- தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து துறைகளும் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கு ஏற்ப பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி நிதிகளையும் ஒதுக்கி வருகிறார். இதில் முக்கியமாக கல்வித்துறையும், மருத்துவத்துறையும் தனது இரு கண்களாக பாவித்து வருகிறார். கல்வி இருந்தால் தான் ஒரு சமூகம் முன்னேற முடியும். ஒரு நாடு முன்னேற முடியும். அந்த அடிப்படையில் கல்விக்கு முக்கியம் கொடுத்து வருகிறார். பல்வேறு நிதி நெருக்கடியில் கல்விக்கு ஏராளமான நிதிகளை தாராளமாக ஒதுக்கி வருகிறார்.

தற்பொழுது 1 முதல் 12ம்வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவச பாட நோட்டுப் புத்தகங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி இவைகள் வழங்கப்படுகிறது. அது தவிர பள்ளிகளுக்கு அடிப்படை தேவைகள் என்னென்னதேவையோ அது செய்து தருமாறு உத்தரவிட்டுள்ளார். மாணவ, மாணவிகள் படிப்பில் முழு கவனம் செலுத்தி 100 சத அளவு தேர்ச்சி வெற்றி பெற வேண்டும். கல்வியில் சிறந்த மாநிலமாக திகழ்ந்தால்தான் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ முடியும். உயர் கல்வியில் தமிழகம் இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளது.

கடந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு, 10ஆம் வகுப்பிலும் சிவகங்கை மாவட்டம் மாநிலத்தில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. இதற்காக முயற்சி எடுத்த மாவட்ட ஆட்சியர் கல்வித் துறை அதிகாரிகள் ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். இந்த முயற்சி தொடர வேண்டும். எனவே மாணவ, மாணவிகள் பள்ளி பருவத்தில் நன்றாக படிக்க வேண்டும். வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

தலைமை ஆசிரியர் திருமதி மலர்வழி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி, வட்டாட்சியர் மாணிக்கவாசகம் வட்ட வழங்கல் அலுவலர் நேரு, பேரூர்க் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், கல்லல் மேற்கு ஒன்றியச் செயலாளர் குன்னக்குடி சுப்ரமணியன், கவுன்சிலர்கள் பஷீர் துணைத் தலைவர் கண்ணன், பாண்டி, சரண்யா, சீனிவாசன், அபுதாகிர், ஜிம் கண்ணன், நிர்வாகிகள் ராம. ரவி, உதயம் சண்முகம், நவாஸ், தமிழ் நம்பி, ஷாஜகான், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், வர்த்தகர் அணி ருத்மா சரவணன், புதூர் கண்ணன், ஆறுமுகம், பிளாசாசேகர் உட்பட ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள் .

தொடர்ந்து பள்ளியில் ஆதார் கார்டு சிறப்பு முகாமினை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்.

### இரா.சிவா தலைமையில்

# இளைஞர் அணி நடத்திய கால்பந்து போட்டி பரிசளிப்பு விழா!

## முன்னாள் துணைவேந்தர் சபாபதிமோகன் பங்கேற்பு!

*புதுச்சேரி, ஜுன் 11-*

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா ஐவர் கால்பந்து விளையாட்டுப் போட்டி உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

மாரில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், புதுச்சேரி, கேரளா, தமிழகத்தின் சென்னை, திண்டிவனம், கடலூர், எண்டியூர், கோவளம், சேலம் உள்ளிட்ட இடங்களில் இருந்து 52 அணிகள் பங்கேற்றன.

இதில் முதல் இடத்தை கோரிமேடு பிளே மேக்கர்ஸ் அணியும், தி.மு.க. அணி இரண்டாம் இடத்தையும், பிளே மேக்கர்ஸ்-3 அணி மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் நடந்தது.

இந்த விழாவிற்கு, மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமை தாங்கினார்.

மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், முன்னாள் துணைவேந்தர் முனைவர் சபாபதிமோகன் கலந்து கொண்டு முதல் இடத்தைப் பிடித்த அணிக்கு ரூ. 25 ஆயிரம், இரண்டாம் இடம் பிடித்த அணிக்கு ரூ. 15 ஆயிரம், மூன்றாமிடம் பிடித்த அணிக்கு ரூ. 10 ஆயிரம் மற்றும் கேடயம், சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

கால்பந்து விளையாட்டுப் போட்டியை மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தாமரைக் கண்ணன், ரெமிஎட்வின், தமிழ்ப்பிரியன், உத்தரம், பஜிலுதீன், மாநில அயலக அணி துணை அமைப்பாளர் சிவா, உப்பளம் தொகுதி துணைச் செயலாளர் ஆரோக்கியராஜ், நிர்வாகிகள் ராஜா, ராஜி, ரமேஷ், கல்யாணசுந்தரம், சுரேஷ் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், ஏ.கே. குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எம். பி.லோகையன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கோபால், வே.கார்த்திகேயன், மு.பிரபாகரன், ராமசாமி, செல்வராதன், பழநி, டாக்டர் மாயக்கிருஷ்ணன், அமுதா குமார், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா.சக்திவேல், செ.நடராஜன், கோ. தியாகராஜன் என்கிற ராஜா, கலியகார்த்திகேயன், சீத்தாராமன், ராஜாராம், ராதாகிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.பி. மணிமாறன், முகம்மது ஹாலிது, வீரய்யன், காயத்ரி ஸ்ரீகாந்த், அருண்குமார், முகிலன், மாநில துணை அமைப்பாளர்கள் காளி, கலிமுல்லா, சந்தோஷ்குமார், எமில், தேவேந்திரன் உருளையன் பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக மீனவர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்!

*கன்னியாகுமரி, ஜுன் 11-*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி சார்பில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அனனியாஸ் தலைமையில், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஏழை மக்களுக்கு மளிகை பொருட்கள், மீன் வியாபாரிகளுக்கு குடைகள் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மேலும் காலத்தை வென்ற தலைவர் தலைப்பில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஜெ. ஹெலன்டேவிட்சன், மாநில சிறுபான்மையினர் நல அணி துணைச் செயலாளர் ஜோசப் ராஜ், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் ப.ஆனந்த், குளச்சல் நகரச் செயலாளர் நாகூர் கான், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் ஜோஸ்லின், மீரா ராஜா, புரோன் உட்பட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அழைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பொறியியல் படிப்பிற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுவரை நீட்டிப்பு!

*சென்னை, ஜுன் 11-*

சென்னை அண்ணா பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் பொறியியல் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் நடத்துகிறது.

நடப்புக் கல்வியாண்டிற்கான பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு கடந்த மே மாதம் 6ஆம் தேதி விண்ணப்ப பதிவு தொடங்கியது.


கடந்த 6ஆம் தேதியுடன் விண்ணப்பப் பதிவு முடிவடைந்த நிலையில், 2 லட்சத்து 49 ஆயிரத்து 918 மாணவர்கள் பொறியியல் படிப்புக்கு விண்ணப்பித்து இருந்தனர்.

அதில் 2 லட்சத்து 6 ஆயிரத்து 12 பேர் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில், மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, பொறியியல் படிப்புக்கான விண்ணப்பப் பதிவு இன்று (11.6.2024) வரை நீட்டிக்கப்படுவதாக தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் தர்மன் ஏற்பாட்டில் குலவணிகர்புரம் நவஜீவன் டிரஸ்டில் மாவட்ட காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதோர் சங்க நிர்வாகிகள் 150 நபர்களுக்கு மதிய உணவினை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் வழங்கினார். நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர், மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன்,மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் நவநீதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மிக்கேல், வட்ட கழக செயலாளர் இசக்கி, மாமன்ற உறுப்பினர்கள் நித்திய பாலையா,சுந்தர், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா,துணை அமைப்பாளர் சேக்உஸ் மானி மற்றும் விஷ்ணு, செல்வி, ரம்யா, ஜான் பிரிட்டோ, வெங்கடேஷ், சுரேஷ், சென்டு, சுரேந்தர், எஸ்தர் ராணி, காந்திமதி, ரோஸ்லின் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ருக்மணி ஆகியோரது மகள் ஆர்.பூஜா – வே.ரமேஷ்ராஜா ஆகியோரது திருமணத்தை நடத்தி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், தவத்திரு குன்றக்குடிபொன்னம்பல அடிகளார், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி மாநகர மேயர் எஸ்.முத்துதுரை ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.